
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 221 | 4 Pages | 9.3.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 221 | 4 பக்கங்கள் | 9.3.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**நில்லாத வற்றை நிலையின என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை**

**விளக்கம்:**
நிலையில்லாதவைகளை நிலையானவை என்று மயங்கி உணரும் புல்லறிவு உடையவராக இருத்தல் வாழ்க்கையில் இழிந்த நிலையாகும்.

# பெண்களின் பாதுகாப்பு குறித்து 88,859 ஆட்டோக்களுக்கு கியூஆர் கோடு வசதி: முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை, மார்ச். 9

சென்னை மாநகரில் காஞ்சிபுரம்,திருவள்ளூர்மற்றும்சுற்றியுள்ள மாவட்டங்கள், மாநகராட்சிகளில் இருந்து வரும் வாகனங்கள் உட்பட 89,641 ஆட்டோரிக்ஷாக்கள் இயங்குகின்றன. இவற்றில், 78,000 ஆட்டோரிக்ஷாக்கள் ஊபர், ரேபிடோ மற்றும் ஓலா போன்ற வாகன சேவைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. பயணிகள் மற்றும் ஓட்டுநர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில், சென்னை பெருநகர காவல்துறை முதல் கட்டமாக, ஒவ்வொரு ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் ஷேர் ஆட்டோக்களுக்கும் தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் பிரத்யேக தனித்துவமான கியூஆர் குறியீட்டை உருவாக்கியுள்ளது.

இந்த கியூஆர் குறியீடு 88,859 ஆட்டோரிக்ஷா / வாடகை கார்களின் ஓட்டுநர் இருக்கைக்கு பின்னால் ஒட்டப்படும்.

இதை பயணிகள் எளிதாக ஸ்கேன் செய்து கொள்ளலாம். அவசரநிலை ஏற்பட்டால், SOS பட்டனை அழுத்தினால், சென்னை பெருநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறைக்கு ஒரு எச்சரிக்கை குறுஞ்செய்தி அனுப்பப்படும்.

இது ஆட்டோரிக்ஷா தற்போது நிற்கும் இடம் மற்றும் ஆட்டோவை பற்றிய முழுமையான விவரங்கள், உரிமையாளரின் விவரங்கள் போன்றவை கட்டுப்பாட்டு அறைக்கு தெரியவரும்.



கூடுதலாக, பயணிகள் 112 என்ற அவசர கட்டுப்பாட்டு அறை எண்ணிற்கு அழைத்து உடனடி உதவியை உறுதிசெய்யும் வசதியும் இதில் உள்ளது. கியூஆர் கோடின் முக்கிய நன்மை: பெண்கள், குழந்தைகள் மற்றும் பெருநகரத்திற்கு பயணிக்கும் அனைத்து பயணிகளுக்கும்பாதுகாப்பானபயணத்தை இப்புதிய கியூஆர் குறியீடு உறுதி செய்கிறது.

இதன்மூலம், சென்னை முழுவதும் ஒரு விரிவான பாதுகாப்பு வலையமைப்பு உருவாக்கப்படும். இந்த புதிய திட்டத்தின் மூலம் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு கியூஆர் குறியீடு ஒட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமை செயலகத்தில் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பொன்முடி, பி.கே.சேகர்பாபு, தலைமை செயலாளர் முருகானந்தம், சென்னை பெருநகர காவல் ஆணையர் அருண், கூடுதல் ஆணையர் (போக்குவரத்து) ஆர்.சுதாகர் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

★ முதல்வரே ஒட்டினார்

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை செயலகத்தில் இந்த திட்டத்தை ஆட்டோவில்ஏறி, டிரைவர் இருக்கைக்கு பின்புறம் கியூஆர் குறியீடு ஸ்டிக்கரை ஒட்டி திட்டத்தை தொடங்கி வைத்தார். அதைத் தொடர்ந்து மற்ற வாகனங்களுக்கு இந்த ஸ்டிக்டர் ஒட்டும் பணிகளில் போலீசார் ஈடுபட்டனர்.

★ அனைத்து வாடகை வாகனத்திலும் கியூஆர் குறியீடு ஒட்ட ஏற்பாடு சென்னை பெருநகர போலீஸ் கமிஷனர் அருண் நிருபர்களிடம் கூறியதாவது:

ரேபிடோ மற்றம் ஊபர் போன்ற செயலியில் புதிதாக ஒரு 'காவல் உதவி' வசதியை அறிமுகம் செய்து வைத்து இருக்கிறோம். அந்த வசதி மூலம் பயணிகள் ஏதாவது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், வாடகை வாகனங்களில் ஒட்டப்பட்டுள்ள காவல் உதவியைபயன்படுத்தினால்போதும், உடனே ஒரு அவசர செய்தி காவல் கட்டுப்பாட்டு அறைக்கு செல்லும். இதற்காக தனியாக காவல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

அதேபோல் கியூஆர் குறியீடு, சென்னையில் மட்டும் மொத்தம் 88 ஆயிரத்து 859 வாடகை வாகனங்கள் இயங்குகிறது. அந்த வாகனங்களின் விபரங்களை போக்குவரத்து துறையிடம் இருந்து பெற்று, ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியாக ஒரு கியூஆர் குறியீடு உருவாக்கி உள்ளோம். அந்த 'கியூஆர்' குறியீட்டில் அந்த வாகனத்தின் உரிமையாளர் பெயர், முகவரி உள்ளிட்ட விபரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதனால் இந்த க்யூ ஆர் குறியீடு பொருத்தப்பட்ட வாகனத்தில் செல்லும்போது, ஏதாவது பெண்களுக்கு பாதுகாப்புயின்மை உணர்ந்தால், அந்த கியூஆர் குறியீட்டை சம்பந்தப்பட்ட பெண் அவர்களின் செல்போனில் உள்ள கேமராவில் ஸ்கேன் செய்தால், அதில் ஒரு 'எஸ்ஓஎஸ்' இருக்கிறது.

அதை க்ளிக் செய்த உடனே அவசர செய்தி சென்னை பெருநகர காவல் கட்டுப்பாட்டு அறைக்கு வந்துவிடும்.

இந்த தகவல்களை வைத்து உடனே காவல்கட்டுப்பாட்டு அறையில் உள்ள காவலர்கள் உடனே சம்பந்தப்பட்ட வாகனம் செல்லும் பகுதியில் உள்ள ரோந்து வாகனத்தை அனுப்பி, அந்த பயணிகளோடு உரையாடி என்ன பிரச்னை என்று கேட்டு தீர்வு காணுவார்கள். அனைத்து வாடகை வாகனங்களிலும் இந்த கியூஆர் கோடு ஒட்ட சென்னை பெருநகர காவல் துறை சார்பில் உறுதி செய்வோம். இவ்வாறு போலீஸ் கமிஷனர் அருண் கூறினார்.

## ரஷியாவுக்கு அதிக வரி, கடுமையான பொருளாதார தடை விதிக்கப்படும்: டிரம்ப் மீண்டும் எச்சரிக்கை



வாஷிங்டன், மார்ச். 9

உக்ரைனுக்கு எதிராக ரஷியா தொடுத்த போரானது 3 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகிறது. அதனை முடிவுக்கு கொண்டு வருவதற்கான முயற்சியின் ஒரு பகுதியாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் சமீபத்தில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியுடன் பேசினார். அப்போது, ரஷியாவுடனான போரை முடிவுக்கு கொண்டு வரும்படி கூறினார்.

ஆனால், போரை நிறுத்தினால் எதிர்காலத்தில் ரஷியாவின்தாக்குதல் இருக்காது என்பதற்கான உத்தரவாதம் என்ன இருக்கிறது ? என ஜெலன்ஸ்கி கேட்டார். இதனால் போரை நிறுத்தும் முடிவில் உக்ரைன் இல்லை என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

இந்த சூழலில், உக்ரைனுக்கான ராணுவ உதவியை டிரம்ப் தலைமையிலான அமெரிக்கா அரசு சமீபத்தில் நிறுத்தியது. இது சர்ச்சையானது. இந்த சூழலில், உக்ரைனுக்கு அளித்து வந்த புலனாய்வு தகவலையும் நிறுத்துவது என அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இது ரஷியாவுக்கு சாதக நிலையை ஏற்படுத்தும் என விமர்சிக்கப்பட்டது.

இந்தநிலையில், ரஷியாவுக்கு எதிரானநிலைப்பாட்டை டிரம்ப் வெளியிட்டு உள்ளார். உக்ரைன் மீது ரஷியா தீவிர தாக்குதல்களை நடத்தி வருவதற்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் ஒரு பகுதியாக புதிதாக பொருளாதார தடைகள், அதிக வரிகள் விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் எச்சரிக்கை விடுத்து உள்ளார். உக்ரைனும், ரஷியாவும் இறுதி தீர்வுக்கு வரவில்லையெனில், இந்த தடைகள் உடனடியாக நடைமுறைக்கு வரும் என்றும் எச்சரித்து உள்ளார்.

ரஷியாவும், உக்ரைனும் இருவரும் காலதாமதம் ஏற்படுவதற்கு முன், உடனடியாக பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என டிரம்ப் அவருடைய ட்ரூத் சோசியல் சமூக ஊடகத்தில் பகிர்ந்து உள்ளார்.

இதுபற்றிய டிரம்ப் பதிவில், போர்களத்தில் உக்ரைனுக்கு எதிராக முற்றிலும் ஒரு கடுமையான தாக்குதலை ரஷியா தொடுத்து வருகிறது என்ற உண்மையின் அடிப்படையில், நான் மிக பெரிய அளவிலான பொருளாதார தடைகளையும், வரிகளையும் ரஷியா மீது விதிப்பது என நான் கடுமையாக பரிசீலனை செய்து வருகிறேன்.

அமைதி ஏற்படுவதற்கான போர்நிறுத்த ஒப்பந்தம் மற்றும் இறுதி தீர்வுக்கான ஒப்பந்தம் ஏற்படும் வரை இந்த தடைகள் இருக்கும் என்றும் அதில் அவர் தெரிவித்து உள்ளார்.

சர்வதேச சட்ட மீறல்கள் அல்லது கடுமையாக நடந்து கொள்வது ஆகியவற்றை தடுத்து நிறுத்துவதற்காக இதுபோன்ற தடைகள் ஒரு நாடால் மற்றொரு நாடு மீது விதிக்கப்படுகிறது. எனினும், ரஷியா மற்றும் உக்ரைன் நாடுகள் இதற்கெல்லாம் அசைந்து கொடுப்பதுபோன்று தெரியவில்லை.

ஏனெனில், கடந்த ஜனவரியில், ஜனாதிபதியாக டிரம்ப் பொறுப்பேற்கும்போது, இதேபோன்றதொரு கடுமையான எச்சரிக்கையை ரஷியாவுக்கு எதிராக வெளியிட்டார். நான் முன்பே ஜனாதிபதியாக இருந்திருந்தேன் என்றால், இந்த போரே நடைபெற்று இருக்காது என்றும் கூறினார். எனினும், உக்ரைன் மற்றும் ரஷியா இடையேயான போரானது முடிவுக்கு வராமல் உள்ளது.

## பாகிஸ்தானில் நிலநடுக்கம்: ரிக்டரில் 4.3 ஆக பதிவு

இஸ்லாமாபாத், மார்ச். 9

பாகிஸ்தானில் இன்று அதிகாலை திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதிகாலை 1.40 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.3 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

27 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 30.20 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 70.03 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை. முன்னதாக, கடந்த மாதம் 21ம் தேதி பாகிஸ்தானில் 4.0 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சோதனையின்போது வெடித்துச் சிதறிய எலான் மஸ்க் நிறுவனத்தின் ராக்கெட்



வாஷிங்டன், மார்ச். 9

உலகின் பெரும் பணக்காரர்களில் ஒருவரான அமெரிக்காவை சேர்ந்த எலான்மஸ்க், 'ஸ்பேஸ் எக்ஸ்' என்ற தனியார் விண்வெளி ஆய்வு நிறுவனத்தை நடத்தி வருகிறார். இந்த நிறுவனத்தின் மூலம் ராக்கெட்டுகள் விண்ணில் ஏவப்பட்டு ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனத்திற்கு சொந்தமான 'ஸ்டார்ஷிப் சூப்பர் ஹெவி' (Starship Super Heavy) ராக்கெட்டின் 8வது சோதனை முயற்சி அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஏவுதளத்தில் மேற்கொள்ளப்பட்டது.

விண்ணில் ஏவப்பட்ட சில நிமிடங்களில் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதால் ராக்கெட் வெடித்துச் சிதறியது. வெடித்துச் சிதறிய ராக்கெட்டின் உடைந்த பாகங்கள் அதிக வெளிச்சத்துடன் தெற்கு ப்ளோரிடாமற்றும்பஹாமாஸ்வான்பகுதியில்தென்பட்ட வீடியோகாட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.

## மகளிர் தினத்தை முன்னிட்டு வாலாஜாபாத் மேற்கு ஒன்றிய சார்பாக நலத்திட்ட உதவிகள்

மகளிர் தினத்தை முன்னிட்டு வாலாஜாபாத் மேற்கு ஒன்றிய சார்பாக நலத்திட்ட உதவிகளை மேற்கு ஒன்றிய தலைவர் எஸ். சார்லஸ்(எ)அல்பர்ட்தலைமையில் சிறப்பு அழைப்பாளர் காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் எஸ்.பி.கே. தென்னரசு கலந்து கொண்டு 100க்கும்மேற்பட்டபெண்களுக்கு சேலை, 200க்கும் மேற்பட்ட நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. சிறப்பு அழைப்பாளர்கள் சி.கற்பகம் காஞ்சிபுரம் மாவட்ட மகளிர்அணி கே.லாவண்யா, வாலாஜபாத் ஒன்றியம் மகளிர் அணி வி.பசுபதி, வாலாஜபாத் ஒன்றிய மாணவர் அணி ஒன்றிய நிர்வாகிகள் பி.சரத், வி.ராஜேஷ், எஸ்.சரத், விக்டர் வி ஜி , எஸ்.சதீஷ்குமார், டி.சரவணன், டேவிட் அப்புன், பி.சுரேஷ், வி.இலக்கியா, என்.ரேகா, எஸ். ரம்யா, டி.ரஞ்சிதா, எம்.தீனா, பி.செந்தில், ஏ.ஆக்னஸ் கிரேஜ்சிலின்,

வழக்கறிஞர் பிரிவு வி.பாரதி கிரி மற்றும் கிளை நிர்வாகிகள் சரண்ராஜ், பி.கணேஷ், திபக், டி.தினேஷ், குமரேசன், வடிவேல்,



ராஜன், மணிகண்டன், குமார், ஜெகன், தினேஷ், சஞ்சய் குமார், மனோஜ், இ.மணிகண்டன், டி.ஆதித்யன், பி.திலகண்டன், வினோத்குமார், ராஜேஷ் டி. ஐயப்பன், பி.ராஜ்குமார், ஆர். மோகன், கே.எஸ்.குமார், எஸ். செந்தில்குமார், கே.நாகராஜன், திருனாகாரசு, முரளி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தென்காசி மாவட்ட கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு புத்தாக்க பயிற்சி

தென்காசி மார்ச் 09.

சங்கரன்கோவில் ராசபாளையம் ரோடு கூட்டுறவு வேளாண்மை விற்பனை சங்க அரங்கில் வைத்து தென்காசி மாவட்ட அனைத்து வகை கூட்டுறவு சங்க பணியாளர்கள் மற்றும் நியாய விலை கடை பணியாளர்களுக்கு புத்தாக்க பயிற்சி கடந்த மார்ச் 06/03/2025ம் தேதி முதல் வருகின்ற 13/03/2025 வரை நடைபெறுகிறது.

தென்காசி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் பொது விநியோகத் திட்ட விற்பனையாளர்களுக்கு புத்தாக்க மற்றும் ஆளுமைத் திறன் பயிற்சி திருநெல்வேலி மேடை தளவாய் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

சங்கரன் கோவில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் தென்காசி மண்டல இணைப்பதிவாளர் திரு. கு.நரசிம்மன், தலைமை தாங்கினார். துணை பதிவாளர்கள் திரு. தொல்காப்பியன், திரு.கோபிநாத் முன்னிலை வைத்தனர். சங்கரன்கோவில் சரக துணைப்பதிவாளர் அலுவலக கண்காணிப்பாளர் பூசைத்தாய் வரவேற்றார்.

இதில் கூட்டுறவு சட்டம் மற்றும் விதிகள்குறித்துதுணைப்பதிவாளர் திரு.தொல்காப்பியன் பயிற்சி அளித்தார். பொது விநியோகத் திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து பொது விநியோக திட்ட துணை பதிவாளர் திரு.கோபிநாத் பயிற்சி அளித்தார். சங்கத்தின் தணிக்கைகள் மற்றும் கணக்கு பராமரித்தல், சட்டப் பணிகள் குறித்து கூட்டுறவு சார்பதிவாளர் திரு. இரா. செல்வகணேஷ் பயிற்சி அளித்தார்.




தென்காசி மாவட்டத்தில் பணியாற்றும் 278 சங்கப் பணியாளர்கள் 306 பொது விநியோகத் திட்ட பணியாளர்கள் என மொத்தம் 584 பணியாளர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

நாள் ஒன்றுக்கு சுமார் 100 பேர் மீதம் மொத்தம் ஆறு நாட்களுக்கு பயிற்சி அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

துணைப் பதிவாளர் அலுவலக கண்காணிப்பாளர் திருமதி. மிக்கேல் மரிய ஜாஸ்மின், மேலாண்மை இயக்குனர் திரு.ராஜ், கூட்டுறவு சார் பதிவாளர்கள் திரு. ரவி, திரு ரமேஷ் பாபு, உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தென்காசி மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் செயலாட்சியர் திரு. மாரியப்பன் பயிற்சிஏற்பாடுகளை செய்துள்ளார்.புத்தாக்க பயிற்சி சிறப்பாக நடைபெறுகிறது.

# அண்ணா பல்கலை விவகாரம் ஞானசேகரனின் கூட்டாளி கைது: 2 கிலோ வெள்ளி பைக் பறிமுதல்

சென்னை, மார்ச். 9

அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவியிடம் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்ட ஞானசேகரனின் கூட்டாளி கைது செய்யப்பட்டார். மேலும், 2கிலோவெள்ளி மற்றும் மோட்டார் சைக்கிள் பறிமுதல் செய்யப்பட்டது. சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் கடந்த டிசம்பர் மாதம் 23ம் தேதி மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானார்.

இந்த வழக்கில் கோட்டூர்புரத்தை சேர்ந்த ஞானசேகரன் என்பவரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் இவர், பாலியல் குற்றச்சாட்டுகள் மட்டுமின்றி பல்வேறு கொள்ளை வழக்கிலும் கைது செய்யபட்டு சிறை சென்றவர் என தெரியவந்தது. கடந்த 2019ம் ஆண்டு நீலாங்கரை, கானத்தூர் பகுதிகளில் வீடுகளில் ஞானசேகரன் கொள்ளையடித்து போலீசில் சிக்கி சிறை சென்றுள்ளார். இதையடுத்து குற்ற செயல்களில் ஈடுபட மாட்டேன் என கூறி பிரி



யாணி கடை நடத்தி வந்துள்ளார்.

ஆனால் பிரியாணி கடை நடத்தி கொண்டே இரவு நேரங்களில் பள்ளிகரணை பகுதிக்கு காரில் சென்று சிசிடிவி கேமிரா இல்லாத வீடுகளை நோட்டமிட்டு 7 வீடுகளில் வெள்ளி பொருட்கள், 200 சவரனுக்கும் மேற்பட்ட நகைகளை கொள்ளை அடித்தது தெரியவந்தது.

இந்நிலையில், ஞானசேகரனின் செல்போனுக்கு பொள்ளாச்சியை சேர்ந்த முரளிதரன் (31) என்பவர் அடிக்கடி பேசியுள்ளார். அதனால் போலீசார் நேற்று முரளிதரனை கைது செய்து விசாரணை செய்தனர்.

இதில், முரளிதரன் பிஎஸ்சி இயற்பியல் படித்து முடித்துவிட்டு பின்னர் எம்பிஏ படிப்பில் சேர்ந்து பாதியில் படிப்பை நிறுத்தி உள்ளார். சென்னையில் பிரபல ஐடி நிறுவனத்தில் பணியாற்றியும் வந்துள்ளார். 8 ஆண்டுகளுக்கு முன் ஒரு மோசடி வழக்கில் செம்மஞ்சேரி போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

அந்த சமயத்தில் ஞானசேகரனும் திருட்டு வழக்கில் கைதாகி சிறையில் இருந்துள்ளார். அப்போது இருவருக்கும் நட்பு ஏற்பட்டுள்ளது. சிறையில் இருந்து வெளி வந்த பின்பும்

நட்பு தொடர்ந்துள்ளது. பின்னர் முரளிதரன் ஆன்லைன் டிரேடிங்கில் ஈடுபட்டு பணத்தை இழந்து கடனாளியாகி உள்ளார். அப்போது சிறை நண்பர் ஞானசேகரனை சந்தித்து பேசிவந்துள்ளார். இதையடுத்து 2019ம் ஆண்டு மதுராந்தகத்தில் ஞானசேகரனுடன் சேர்ந்து ஆள் கடத்தலில் ஈடுபட்டதால் இருவரும் கைதாகி உள்ளனர். பின்னர் 2022ல் பள்ளிக்கரணையில் இருவரும் சேர்ந்து 2 கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் இருவரும் சேர்ந்து திருவான்மியூரில் ஆன்லைன் டிரேடிங்கில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அதில் நினைத்த படி சக்சஸ் ஆகவில்லையாம். அதன் பிறகு முரளிதரன் குடும்பத்துடன் சொந்த ஊருக்கு சென்றுவிட்டார். பெங்களூருவில் ஐடி நிறுவனத்தில் பணியாற்றும் போது உடன் பணியாற்றிய பெண்ணை காதலித்து திருமணம் செய்துள்ளார்.

தற்போது காதல் மனைவிதான் முரளி வாங்கிய கடன்களை அடைத்து வருகிறாராம். தற்போது முரளி பஸ் கிளீனராக பணியாற்று வருவது தெரியவந்தது. இதையடுத்து முரளி கொடுத்த தகவலின்பேரில் 2கிலோ வெள்ளி பொருட்கள், பெருங்களத்தூர் பாலத்தின் கீழ் நிறுத்தி இருந்த ஞானசேகரனின் பைக்கும் பறிமுதல் செய்யப்பட்டன. போலீசார் தொடர்ந்து விசாரித்து வருகிறார்கள்.

# ஆட்சேபம் இல்லாத புறம்போக்கு நிலங்களில் வசிப்போருக்கு பட்டா: வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்ட தமிழ்நாடு அரசு

சென்னை, மார்ச். 9

ஆட்சேபம் இல்லாத புறம்போக்கு நிலங்களில் வசிப்போருக்கு பட்டா வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு அரசு விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

நீர் நிலை, மேய்ச்சல் நிலம், கோயில் நிலம் மற்றும் உரிமையாளர் அடையாளம் காணப்படாத நிலங்களில் வசிப்போ




ருக்கு பட்டா வழங்கப்படாது . சென்னை பெருநகரப் பகுதியில் 10 ஆண்டுகளுக்கு மேல் வசிப்போருக்கு பட்டா வழங்கப்படும் .

மற்ற இடங்களில் 5 ஆண்டுகளுக்கு மேல் வசிப்போருக்கு பட்டா வழங்கப்படும் .

3 லட்சத்திற்கு குறைவான ஆண்டு வருமானம் உள்ள குடும்பங்களுக்கு இலவசமாக பட்டா வழங்கப்படும் உள்ளிட்ட பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் சுமார் 86,000 பேருக்கு அடுத்த 6 மாதங்களுக்குள் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது .

# திருத்தணி சாலை விபத்து: முதல்வர் நிதியுதவி அறிவிப்பு

சென்னை மார்ச்.9

திருத்தணியில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதியுதவி வழங்கிட முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், பீரகுப்பம் மதுரா கே.ஜி. கண்டிகை கிராமத்தில் பிற்பகல் 03.30 மணியளவில் திருத்தணியில் இருந்து சோளிங்கர் நோக்கிச் சென்ற டிப்பர் லாரியும், ஆர்.கே.பேட்டையில் இருந்து திருத்தணி நோக்கிச் சென்ற அரசுப் பேருந்தும் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதிய விபத்தில் பேருந்தில் பயணம் செய்த திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை வட்டம், அம்மையார்குப்பத்தைச் சேர்ந்த பாண்டுரங்கன் (வயது 60) த/பெ. சுப்பிரமணி, சிவானந்தம் (வயது 53) த/பெ.சண்முகம், மகேஷ் (வயது 40) த/பெ.கண்ணியப்பன் மற்றும் முரளி (வயது 38) த/பெ.பெரியசாமி ஆகிய நான்கு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.



மேலும், இவ்விபத்தில் காயமடைந்து திருத்தணி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வரும் 28 நபர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் மாடலாக இருக்கிறது கமல் பேச்சு

சென்னை, மார்ச். 9

சென்னை கொளத்தூரில் நடைபெற்ற முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் பிறந்த நாள் விழாவில் நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவருமான கமல்ஹாசன் கலந்து கொண்டார். இந்த விழாவில் பேசிய கமல்ஹாசன் கூறியதாவது:

தமிழ்நாடு இன்று ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் ஒரு மாடலாக இருக்கிறது. கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, தனிநபர் வருமானம் உள்ளிட்ட அத்தனை தரப்பட்டியலிலும் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. இது வெளிநாட்டிலிருந்து பார்ப்பவர்களுக்கு கூட புரியும் உண்மை. துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் முன்னெடுப்புகளால் தமிழ்நாட்டு இளைஞர்கள் விளையாட்டுத் துறையிலும் பதக்கங்களை குவித்து கொண்டு இருக்கிறார்கள்.

மத்திய அரசு, மாநிலங்களின் உரிமைகளை பறிக்க முயலும்போது, இந்துத்துவ கொள்கைளையும், இந்தியையும் தேசமெங்கும் திணிக்க முற்படும்போது, ஜனநாயகத்தையும், கூட்டாட்சி தத்துவத்தையும் கேள்விக்குள்ளாக்கும்போது, தெற்கிலிருந்து ஓங்கி ஒலிக்கும் உறுதியான குரல்களில் சிறப்பான குரலாக ஸ்டாலின் விளங்குகிறார்.




தமிழ் மொழியையும், பண்பாட்டையும் போற்றிப் பாதுகாக்கும் அரும்பணியில் தன்னை தளராது ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் ஸ்டாலின் நீடுழி வாழ வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன். கொளத்தூர் தொகுதி முதல்வரின் மனதுக்கு நெருக்கமான தொகுதி என்பதற்கு பல உதாரணங்கள் சொல்லலாம். அவர்தான் கொளத்தூரை தனி தாலுக்காவாக மாற்றினார். முதல்வர் படைப்பகம், பெரியார் மருத்துவமனை என்று அவர் கொளத்தூர் மக்களுக்கு செய்தவை ஏராளம். இவ்வாறு அவர் கூறினார்.

# மலைக்குறவன் பழங்குடியினர் முன்னேற்ற சங்கம் சார்பில் பரிந்துரைக்கப்பட்ட 65க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நலவாரிய அட்டை வழங்கப்பட்டது

ஆத்தூர், மார்ச்.9

மலைக்குறவன் பழங்குடியினர் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்ட மனுக்கள் பரிந்துரை செய்யப்பட்டு, ஆத்தூர், கெங்கவல்லி, தலைவாசல், பெத்தநாயக்கன்பாளையம் வட்டத்திற்கு உட்பட்ட 65க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நலவாரிய அட்டைகள் வழங்கப்பட்டன.

இவ்வசதி, பயனாளிகள் அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் மருத்துவ உதவிகளை பெற உதவக்கூடியதாக இருக்கும்.



ஆத்தூர் தனித் தாசில்தார் (ஆ.தி.ந.) அவர்களிடம் இருந்து பயனாளிகள் நேரடியாக நலவாரிய அட்டைகளை பெற்றனர்.

இந்த நிகழ்வில், மலைக்குறவன் பழங்குடியினர் முன்னேற்ற சங்கத்தின் உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்கினர்.

# காதல் திருமணம் முயற்சியில் ஏற்பட்ட தகராறு - சரித்திர பதிவேடு குற்றவாளி கைது

ஸ்ரீபெரும்புதூர், மார்ச்.9

ஸ்ரீபெரும்புதூர் காவல நிலைய எல்லைக்குட்பட்ட கீவலூர்கிராமத்தில், 18 வயது பூர்த்தியடையாத சிறுமியுடன் காதல் திருமணம் செய்ய முயற்சித்ததுடன், அதில் ஏற்பட்ட தகராறினால் சிறுமியின் தாயை கையால் அடித்து, காலால் எட்டி உதைத்தும், தந்தையை கத்தியால் வெட்ட முயன்ற




சரித்திர குற்றவாளி சகா @ சீனிவாசன் (குப்பன்மகன்) என்பவரை ஸ்ரீபெரும்புதூர் காவல்துறையினர் கைது செய்தனர்.

இவ்வழக்கில் ஏழு பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் செய்யப்பட்ட பிறகு வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

மேலும், சகா சீனிவாசன் மீது 15க்கும் மேற்பட்ட கொலை, கொள்ளை, கஞ்சா தொடர்பான வழக்குகள் நிலுவையில் உள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, குற்றச்செயல்களில் ஈடுபடும்வர்களை கண்டறிந்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என காவல் துறை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

# விமர்சையாக இடம்பெற்ற JMJ Media வின் மகளிர் தினச் சிறப்பு நிகழ்ச்சிகள்

தேவகோட்டை, மார்ச்.9

உலக மகளிர் தினத்தினை முன்னிட்டு ஜே. எம். ஜே மீடியாவினால் "பெண்களைப் போற்றுவோம்" எனும் தலைப்பில் உலகின் பல்வேறு இடங்களில் சிறப்பு நிகழ்ச்சிகள் மிகக் கோலாகலமாக நடைப் பெற்றன.

உலகில் பல நாடுகளில் இருக்கும் நமது ஒருங்கிணைப்பாளர்களைக் கொண்டு ஒவ்வொரு மாதமும் குறிப்பாக உலகம் கொண்டாடுகின்ற சிறப்பு மிக்க தினங்களை முன்னிட்டு அது சார்ந்த செயல் திட்டங்களை வெற்றிகரமாக ஜே.எம்.ஜே மீடியா செயல்படுத்தி வருகின்றது.

அந்தவகையில் ஜே.எம்.ஜே மீடியா நிறுவனத்தினால் இன்




றைய தினமான மார்ச் 8 ஆம் திகதி கொண்டாடப்படும் ஒவ்வொரு ஆணின் தாயாய், தாரமாய், சகோதரியாய் மற்றும் நண்பியாய் ஒவ்வொரு கதாப்பாத்திரங்களை சுமந்து கொண்டுள்ள பெண்களுக்கான தினமான உலக மகளிர் தினத்தினை உலகம் முழுவதும் உள்ள பல நாடுகளின் ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் அதன் பணிப்பாளர் ஜஸூரா ஜலீல் அவர்களின் தலைமையில் இன்றைய தினம் மிகச் சிறப்பாக நடத்தி முடிக் கப்பட்டது

இதில் ஜே.எம்.ஜே மீடியாவின் சிறப்பு பெற்ற ஆசிரியர் குலத்தின் மூலம் எதிர்காலத் தலைவர்களான பாடசாலை மாணவர்களுக்கும் , தனியார் வகுப்பு மாணவர்களுக்கும் "பெண்களை போற்றுவோம்" எனும் தலைப்பில் கருத்தரங்குகள் இடம் பெற்றன. மேலும் எவ்வாறு எம் சமூகத்தில் பெண்கள் மதிக்கப்பட வேண்டும், அவர்களின் உரிமைகள் பற்றியும் மேடை நாடகங்களும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது .

அத்துடன், பெண்களைப் போற்றுவோம் எனும் தலைப்பிலான பேச்சுப் போட்டிகளும் இடம்பெற்றதுடன், இந்நிகழ்வுகளில் இன்று வரைக்கும் உலக மக்களுக்காக தம்மையே அர்ப்பணித்து சேவைகளைச்செய்து சரித்திரத்தில் இடம்பிடித்த சாதனைப் பெண்களின் வேடமணிந்து சின்னஞ்சிறார்கள் மேடைகளில் தோன்றியமை இந்நிகழ்வை மென்மேலும் உணர்வு பொங்கச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# உலக மகளிர் தினத்தை முன்னிட்டு கோபிசெட்டிபாளையத்தில் விழிப்புணர்வு பேரணி

கோபி, மார்ச். 9

கோபிசெட்டிபாளையம் வட்ட சட்ட பணிகள் குழு கோபிசெட்டிபாளையம் வழக்கறிஞர்கள் சங்கம் ஈரோடு மாவட்டம் காவல்துறை கோபிசெட்டிபாளையம் மற்றும் பிகேஆர் மகளிர் கலைக்கல்லூரி இணைந்து நடத்தும் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது கடந்த நாட்களாக பெண்கள் பாலியல் சீண்டல்கள் இதுபோன்ற பல்வேறு பாதிப்புகளுக்கு ஆளாகி வருகின்றனர் இதை தடுத்து நிறுத்துவதற்காக இந்த பேரணியானது கோபிசெட்டிபாளையம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் துவங்கி




கோபி பேருந்து நிலையம் வரை நடைபெற்றது நிகழ்ச்சியில் கோபி பவானி சக்தி அந்தியூர் ஆகியபகுதிகளில் இருந்து மாவட்ட நீதிபதிகள் மற்றும் கூடுதல் நீதிபதிகள் மற்றும் 100க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள் மற்றும் காவல்துறையினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# 'ஆங்கில வழி பள்ளிகளை மூட வேண்டும்' மதுரை ஆதீனம் பேச்சு

கன்னியாகுமரி, மார்ச்.9

குமரியில் நடைபெற்ற சமய மாநாட்டில் மதுரை ஆதினம் ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் கலந்து கொண்டார். இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மதுரை ஆதினம், மும்மொழி கொள்கை அவசியம் என தெரிவித்



தார்.

தொடர்ந்து பேசிய அவர்,"ஆங்கிலம்அடிமை மொழி, அதனை தவிர மற்ற அனைத்து மொழிகளையும் கற்கலாம். ஆங்கில வழி பள்ளிகளை மூடிவிட்டு தமிழ் வழி பள்ளிகளை திறக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

# சென்னையில் இன்று காலை முதல் மாலை வரை புறநகர் மின்சார ரெயில் சேவை ரத்து

சென்னை, மார்ச். 9

சென்னை கடற்கரை மற்றும் எழும்பூர் இடையேயான 4வது ரெயில் பாதை அமைக்கும் பணிகள் காரணமாக, புறநகர் மின்சார ரெயில் சேவையில் வரும் மார்ச் 9ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாற்றம் செய்யப்பட உள்ளதாக சென்னை ரெயில்வே கோட்டம் அறிவித்துள்ளது.

சென்னை கடற்கரை மற்றும் எழும்பூர் இடையேயான 4வது ரெயில் பாதை அமைக்கும் பணி காரணமாக, மார்ச் 9ம் அன்று காலை 5:10 மணி முதல் மாலை 4:10 மணி வரை கடற்கரை எழும்பூர் இடையே இயக்கப்படும் புறநகர் மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்படுகின்றன. மேலும் தாம்பரம் கோடம்பாக்கம் தாம்பரம் இடையே ஒவ்வொரு 30 நிமிடங்களுக்கும் பயணிகள் சிறப்பு ரெயில்கள் இயக்கப்படும்.

சென்னை கடற்கரை செங்கல்பட்டு/காஞ்சிபுரம்/திருமால்பூர்/அரக்கோணம் ஆகிய இடங்களில் இருந்து இயக்கப்படும் மின்சார ரயில்கள் சென்னை கடற்கரை தாம்பரம் இடையே காலை 05:10 மணி முதல் மாலை 4:10 மணி வரை பகுதியளவு ரத்து செய்யப்படுகின்றன.




மேலும் பயணிகளின் வசதிக்காக சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன. நான்காவது ரயில் பாதை அமைக்கும் பணிகளுக்கு பின்னர், ஞாயிற்றுக்கிழமை மாலை 4:10 மணி முதல் மின்சார ரயில் சேவைகள் வழக்கம் போல் மீண்டும் தொடங்கும் என சென்னை ரயில்வே கோட்டம் தெரிவித்துள்ளது.

# திருத்தணி சாலை விபத்தில் 5 பேர் உயிரிழந்தது வருத்தம் அளிக்கிறது: எடப்பாடி பழனிசாமி



சென்னை, மார்ச். 9

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

திருத்தணி அருகே அரசுப் பேருந்து லாரி நேருக்கு நேர் மோதியதில் 5 பேர் உயிரிழந்துள்ளதாகவும் , மேலும் பலர் படுகாயமடைந்து உள்ளதாகவும் வரும் செய்தி கேட்டு மிகுந்த வருத்தமுற்றேன்.

உயிரிழந்தோர் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தங்களையும் தெரிவித்துக் கொள்வதுடன், படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளோர்க்கு உரிய சிகிச்சை அளிக்குமாறு திமுக அரசை வலியுறுத்துகிறேன்.என தெரிவித்துள்ளார்.

# ஒட்டிய சம்மனை கிழித்து போலீசார் மீது தாக்கிய விவகாரம் சீமான் வீட்டு பணியாளர், பாதுகாவலர் ஜாமீன் மனு: சென்னை உயர் நீதிமன்றத்தில் நாளை விசாரணை



சென்னை, மார்ச். 9

சீமான் வீட்டுப் பணியாளர் மற்றும் பாதுகாவலர் ஜாமீன் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர். திருமணம் செய்து கொள்வதாக கூறி ஏமாற்றியதாக நடிகை அளித்த புகாரில் சென்னை வளசரவாக்கம் காவல் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு நீலாங்கரையில் உள்ள நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வீட்டில் காவல்துறையினர் சம்மனை ஒட்டிச் சென்றனர்.

அப்போது, சீமான் வீட்டில் ஒட்டப்பட்ட சம்மனை கிழித்ததாக அவரது பணியாளர் சுபாகர் மற்றும் பாதுகாவலர் அமல்ராஜ் ஆகியோரை நீலாங்கரை காவல்துறையினர் கைது செய்தனர். இச்சம்பவம் தொடர்பாக ஆயுத தடுப்பு சட்டம் உட்பட 4 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர்கள் இருவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். இந் நிலையில், செங்கல்பட்டு மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் அமல்ராஜ் மற்றும் சுபாகர் இருவரும் ஜாமீன் கேட்டு தாக்கல் செய்யத மனுவை தள்ளுபடி செய்து செங்கல்பட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து, இருவரும் ஜாமீன் கேட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர். மனுவில், அரசியல் நோக்கில் தாங்கள் கைது செய்யபட்டுள்ளதாகவும், காவல்துறை கூறிய குற்றச்சாட்டு அனைத்தும் தவறானது. துப்பாக்கிக்கு உரிய அனுமதி உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மனு திங்கள்கிழமைவிசாரணைக்கு வரும் என்று கூறப்படுகிறது.

# கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு ஜெயலலிதாவின் பாதுகாப்பு அதிகாரிக்கு சிபிசிஜடி சம்மன்: 11ம் தேதி ஆஜராக உத்தரவு



கோவை, மார்ச்.9

நீலகிரி மாவட்டம் கொடநாட்டில் கடந்த 2017ம் ஆண்டு நடந்த கொலை மற்றும் கொள்ளைவழக்கு தொடர்பாக இதுவரை 300க்கும் மேற்பட்டோரிடம் சிபிசிஐடி போலீசார் விசாரணை நடத்தி உள்ளனர். எஸ்டேட் மேலாளர் நடராஜன் நேற்றுமுன்தினம்கோவை காந்திபுரத்தில் உள்ள சிபிசிஐடி அலுவலகத்தில் 8 மணி நேரம் விசாரணை நடந்தது.

இந்தநிலையில், முன்னாள் முதலமைச்சர் மறைந்த ஜெயலலிதா மற்றும் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு முதன்மை பாதுகாப்பு அதிகாரியாக இருந்த வீரபெருமாளுக்கு சிபிசிஜடி போலீசார் சம்மன் அனுப்பி உள்ளனர். அதில் வருகிற 11ம் தேதி (செவ்வாய்க்கிழமை) கோவை காந்திபுரத்தில் உள்ள சிபிசிஐடி அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் கடந்த சில நாட்களில் மட்டும் 5க்கும் மேற்பட்டோரிடம் சிபிசிஐடி போலீசார் விசாரணை நடத்தி உள்ளதால் இந்த வழக்கு சூடுபிடிக்க தொடங்கியுள்ளது. எனவே அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் கலக்கத்தில் உள்ளனர்.

# ஊட்டி மலைப்பாதையில் டிரைவருக்கு திடீர் மயக்கம் உயிர் தப்பிய 60 பயணிகள்



ஊட்டி, மார்ச்.9

நீலகிரி மாவட்டம், ஊட்டி அருகே மசினகுடியில் இருந்து நேற்று காலை 6.30 மணியளவில் 60 பயணிகளுடன் அரசு பஸ் ஊட்டியை நோக்கி வந்து கொண்டிருந்தது. பஸ்சை டிரைவர் அசோக்குமார் ஓட்டினார். பஸ் பொக்காபுரம் சந்திப்பை கடந்து மாவனல்லா நோக்கி வந்த போது டிரைவர் அசோக்குமாருக்கு திடீரென குறைந்த ரத்த அழுத்தம் (லோ பிபி) காரணமாக தலைசுற்றல் ஏற்பட்டு மயங்கினார். இதனால் கட்டுப்பாட்டை இழந்த பஸ் அங்குமிங்குமாக வேகமாக சென்றது.

இதனை கண்டு பஸ்சில் இருந்த பயணிகள் அலறி கூச்சல் போட்டுள்ளனர். லேசான மயக்கத்தில் இருந்த டிரைவர் சுதாரித்துக் கொண்டு பஸ்சை வனத்திற்குள் திருப்பினார். இதனால் சாலையில் இருந்து இறங்கிய பஸ் சுமார் 100 மீட்டர் தூரம் வனத்திற்குள் சென்று நின்றது. டிரைவரின் சாதுர்யமான செயலால் 60 பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். சமவெளி சாலையில் இருந்து அபாயகர கல்லட்டி மலைப்பாதையில் ஏறுவதற்கு சில கிமீக்கு முன்னதாக இச்சம்பவம் நடைபெற்றதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

# 17 மீனவர்களுக்கு ரூ.12.50 லட்சம் அபராதம்: ஒருவருக்கு சிறை

ராமேஸ்வரம், மார்ச்.9

தமிழக மீனவர்கள் 17 பேருக்கு ரூ.12.50 லட்சம் அபராதம் விதித்து மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ராமேஸ்வரம் மற்றும் மண்டபம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற ஜெயபிரகாஷ், முனியே ந்திரன், சத்திய சதிஷ் ஆகியோருக்குச் சொந்தமான மூன்றுவிசைப்படகுகளை இலங்கை கடற்படையினர் கைப்பற்றி, படகுகளிலிருந்த 18 மீனவர்களை தனித்தனியாக கைது செய்திருந்தனர். மீனவர்கள் 18 பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து நீதிமன்றக் காவலில் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டனர். மீனவர்களின் காவல் நேற்று நிறைவடைந்ததை தொடர்ந்து மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி 17 மீனவர்களுக்கும் இந்திய மதிப்பில் ரூ.12 லட்சத்து 50 ஆயிரம் அபராதம், ஒரு மீனவர் மட்டும் 2வது முறையாக சிறைப்பட்டிருந்ததால் அவருக்கு 2 ஆண்டு சிறை தண்டனை விதித்து உத்தரவிட்டார். இதில் 17 மீனவர்கள் அபராத தொகை கட்டிய பின் விடுதலை செய்யப்படுவார்கள் என யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரக அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



திண்டுக்கல் பேருந்து நிலையம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சி தலைவர் சரவணன் திடீர் ஆய்வு மேற்கொண்டார்

# கோடைகாலம், பொதுத்தேர்வை கருத்தில் கொண்டு தடையற்ற மின் விநியோகத்தை உறுதி செய்ய வேண்டும்: அதிகாரிகளுக்கு மின்வாரியம் உத்தரவு



சென்னை, மார்ச்.9

தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழக இயக்குநர் வெளியிட்டுள்ள அறிக்கை: சி.பி.எஸ்.இ, ஐ.எஸ்.சி, ஐ.சி.எஸ்.இ, 10,11 மற்றும் 12ம் வகுப்புகளுக்கு பொதுத்தேர்வு மற்றும் செய்முறை உள்ளிட்ட தேர்வுகள் நடைபெற்று வருகின்றன. இதனால், அனைத்து தேர்வு மையங்களிலும் தினசரி காலை 7 மணி முதல் மாலை 5.30 மணி வரை தடையற்ற வகையில் மும்முனை மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தேர்வு மையத்துக்கு மின் விநியோகம் செய்யும் மின் மாற்றியை கண்காணிக்க அலுவலர்களை நியமிக்க வேண்டும். படிக்க தடையில்லா வகையில் அறிவுறுத்தப்படுகிறது.

இதுதவிர, தமிழ்நாடு சட்டப்பேரவையில் பட்ஜெட் கூட்டத்தொடர் தொடக்கம், கோடைகாலம் ஆரம்பம் உள்ளிட்டவைகளை கருத்தில் கொண்டு தடையற்ற மின் சாரத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதன்படி, துணை மின்நிலையங்களை கண்காணிப்பது, அவசர கால பணிகளுக்கு ஏற்ற வகையில் பணியாளர்கள் செயல்படுதல், ஊழியர்கள் மற்றும் மின் சாதனங்களை தயார் நிலையில் வைத்திருத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.



தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர் .இராமச்சந்திரன் அவர்கள் 50 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.55 இலட்சம் மதிப்பிலான இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார்கள்.இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள், தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.மரு.ராணி ஸ்ரீகுமார் அவர்கள், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பழனிநாடார் அவர்கள், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஈ.ராஜா அவர்கள், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மரு.தி.சதன்திருமலைக்குமார் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சீ.ஜெயச்சந்திரன் அவர்கள் கலந்து கொண்டனர்.

# உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விழிப்புணர்வு தொடர் ஓட்டப்பந்தயம்



தேனி மார்ச் 9

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விழிப்புணர்வு தொடர் ஓட்டப்பந்தயத்தை தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.R.சிவப்பிரசாத், இ.கா.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.. தேனி பங்களாமேட்டில் தொடங்கி நேரு சிலை வழியாக மேனகா மில் மைதானத்தில் நிறைவுற்றது. இதில் 500க்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டனர்.. வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கப்பட்டது...

# வைகை எக்ஸ்பிரஸ் செயினை இழுத்து நிறுத்திய மர்ம நபர்

உளுந்தூர்பேட்டை, மார்ச்.9

மதுரையில் இருந்து வைகை எக்ஸ்பிரஸ் ரயில் சென்னை எழும்பூர் நோக்கி பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்று கொண்டிருந்தது. இந்த ரயில் உளுந்தூர்பேட்டை ரயில் நிலையத்தை கடந்து விழுப்புரம் நோக்கி சென்று கொண்டிருந்த போது பாதூர் காந்திநகர் என்ற இடம் அருகில் ரயில் பெட்டியின் உள்ளே இருந்த அவசர நிறுத்தம் செயினை யாரோ மர்ம நபர்கள் பிடித்து இழுத்துள்ளனர். இதனால் எக்ஸ்பிரஸ் ரயில் அந்த இடத்திலேயே நின்றது. இதனைத் தொடர்ந்து எதற்காக நிறுத்தப்பட்டது என்று ரயில்வே அதிகாரிகள் மற்றும் போலீசார் விசாரணை செய்ததில் யார் நிறுத்தியது என தெரியாததால் குழப்பம் அடைந்தனர். இதனால் பாதூர் காந்திநகர் பகுதியில் வைகை எக்ஸ்பிரஸ் ரயில் 15 நிமிடம் நிறுத்தப்பட்டு பின்னர் விழுப்புரத்திற்கு புறப்பட்டு சென்றது. இதனால் ரயில் பயணிகள் அவதி அடைந்தனர்.

# திருநெல்வேலி மாவட்ட தமிழர் விடுதலை களம் சார்பில் கோரிக்கை மனு



நெல்லை, மார்ச். 9

திருநெல்வேலி மாவட்டம் மானூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பேட்டை ரூரல் சிற்றூராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் கிராம சாலை திட்டத்தின் கீழ் ரூபாய் ஒரு கோடியே 20 லட்சம் மதிப்பீட்டில் நடைபெறும் சாலை பணி அரசு விதிகளுக்கு அப்பாற்பட்டு அரசு விதிகளுக்கு புறம்பாக நடைபெறுகிறது

இது குறித்து நடவடிக்கை எடுக்க கோரி திருநெல்வேலி மாவட்ட தமிழர் விடுதலை களம் சார்பில்நெல்லைமாவட்ட ஆட்சியர் அவர்களிடமும் திட்டஇயக்குனர்மாவட்ட ஊராட்சி வளர்ச்சி முகமை அவர்களிடமும் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது

அதைத்தொடர்ந்து திருநெல்வேலி மாவட்ட பத்திரிகையாளர் அரங்கில் பத்திரிக்கையாளர் சந்திப்பு நடைபெற்றது தமிழ்நாடு முதலமைச்சர் கிராம சாலை திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெறும் பணிகளை மாவட்ட ஆட்சியர் தலைமையில் உடனடியாக ஆய்வு செய்திட வேண்டும் தமிழ்நாடு முதலமைச்சர் கிராம சாலை திட்டத்தில் ஒப்பந்ததாரருக்கு பணி ஆணையில் அரசு வகுத்துள்ள விதிகளை மீறி செயல்படும் ஒப்பந்ததாரர்கள் இனி வரும் காலங்களில் அரசு பணிகளில் டெண்டர் எடுத்திட அனுமதிக்க கூடாது

மேலும் முறைகேடில் ஈடுபடுபவர்கள் குறித்த விபரங்கள் அடங்கிய தனிப்பட்டியல்ஏற்படுத்தி ஒவ்வொருகிராமஊராட்சி மன்றங்களில் உள்ள அறிவிப்பு பலகைகளில் பொதுமக்களுக்கு தெரியுமாறு அறிவிப்பு பலகை செய்திட வேண்டுமென தமிழக அரசுக்கு பத்திரிகையாளர்சந்திப்பில்வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது

இந் நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் வேசமுத்துக்குமார் மாநில சட்ட ஆலோசகர் பிரபு ஜீ வன் கொள்கை பரப்புச் செயலாளர் மாரியப்பா பாண்டியன் மாவட்ட செயலாளர் மணி பாண்டியன் டவுண் பகுதி செயலாளர் அலெக்ஸ் பாண்டியன் வழக்கறிஞர்கள் இசக்கிமுத்துராஜா பிரதீப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 16 கோடி செலவில் புது பொலிவு ,நவின வசதிபெறும் பொம்மிடி ரயில் நிலையம்; பேரூராட்சி பகுதி ஆக்கிரமிப்பு ,சமூக விரோத செயலால் பொதுமக்கள் அவதி




தர்மபுரி, மார்ச். 9

தர்மபுரி மாவட்டம் பொம்மிடி ரயில் நிலையம் 1867 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்ஆட்சிகாலத்தில் துவங்கப்பட்டது

158 ஆண்டுகள் மிகப் பழமையான ரயில் நிலையமாக இது உள்ளது தர்மபுரி மாவட்டத்தில் இது முக்கியமான ரயில் நிலையமாக இருந்து வருகிறது,

இங்கிருந்து நாட்டின் உள்ள பல்வேறு நகரங்களை இணைக்க கூடிய முக்கிய சாலை இந்த ரயில் சாலை ஆகும்

தர்மபுரி ,ஏற்காடு, அரூர், என சேலம் &தர்மபுரி மாவட்ட எல்லையில் இந்த ரயில் நிலையம் அமைந்துள்ளதால் தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயணம் செய்து பயன் பெற்று வருகின்றனர்

நல்ல வருவாய் கொடுக்கக்கூடிய இந்த ரயில் நிலையத்தை மத்திய அரசு பயணிகள் நலனுக்காக கடந்த ஆண்டு புது ப்பிக்கும் திட்டத்தோடு ரூபாய் 16 கோடி செலவில் பல்வேறு வசதி வாய்ப்புகளை அமைத்துக் கொடுத்துள்ளது, அதன்படி டிக்கெட் கவுண்டர், முகப்பு பகுதி அழகுறபுதுப்பித்தல், முன் நுழைவு வரவேற்பு ஆர்ச், பயணிகள் இருக்கைகள், தரைத்தலங்கள் பளிங்கு கற்கள் அமைத்தல், லிப்ட் வசதி, உயர் தண்டவாளத்தின் மேல் பகுதி பாலம் ,அழகுற மின்விளக்குகள் வசதி, கழிப்பிட வசதி,டிஜிட்டல் தானியங்கி பெயர் பலகை என பல்வேறு வசதி வாய்ப்புகளை தற்போது ரயில்வே துறை செய்து வருகிறது ,விரைவில் இதன் திறப்பு விழா பாரத பிரதமர் நரேந்திர மோடியால் துவக்கி வைக்க இருக்கிறது

ரயில்வே துறை பயணிகள் வசதிகளுக்காக இவ்வளவு செய்து கொடுத்திருந்தாலும் , மாநில அரசு குறிப்பாக பொம்மிடி பொ. மல்லாபுரம் பேரூராட்சி ரயில் நிலைய முன் பகுதியில் உள்ள நெடுஞ்சாலை பகுதிகளில் ஆக்கிரமிப்பாளர்களாலும், சமூக விரோதிகளாலும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு பொதுமக்கள் சென்று வருவதற்கு சாலைகளில் பெரும் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர்

குறிப்பாக நெடுஞ்சாலை போரூராட்சிதுறைக்கு சொந்தமான காலியிடங்களையும் ஆக்கிரமிப்பு செய்து வைத்துக்கொண்டு விலை பேசி இடங்களை விற்றும் வருகின்றனர் குறிப்பாக ரயில் நிலைய முன் பகுதியில் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் பழய சர்வே எண் 42/1,புதிய சர்வே எண் 42/6 ல்சுமார் 18 சென்ட் நிலம் பல கோடி ரூபாய் மதிப்பு மிக்க இந்த நிலத்தில் ஆக்கிரமிப்பாளர்கள்கடைகள் அமைத்து நடத்தி வருகின்றனர் இவற்றை அகற்றி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அரசு கொண்டுவர வேண்டும்எனசமூக ஆர்வலர்கள்கோரிக்கைவைக்கின்றனர்

ஏற்கனவே மாவட்ட நீதிமன்றம், உயர் நீதிமன்றம் இரு முறை தீர்ப்பு வழங்கி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு நிலத்தை எடுத்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தெளிவாக தீர்ப்பு வழங்கியுள்ளது

தீர்ப்பை நடைமுறைப் படுத்த வேண்டும் எனதமிழக அரசுசெயலாளர்,நிர்வாக ஆணையர் , தருமபுரிமாவட்டஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டஅலுவலர், தாசில்தார் என அனைவருக்கும் நடைமுறைப்படுத்தநீதிமன்றம் உத்தரவிட்ட பின்பும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இவற்றை எடுத்து வராமல்மாவட்ட நிர்வாகம் பொறுப்பை தட்டிக் கழித்து வருவதாக சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்

அதேபோல தர்மபுரி நெடுஞ்சாலை , ஓமலூர் நெடுஞ்சாலை போன்ற பகுதிகளில் சமூக விரோதிகளிடம் இருந்துஆக்கிரமிப்புக்களை அகற்றி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்

தற்போதைய நிலையில் மத்திய அரசு ரயில் நிலையத்தை புதுப்பித்து பயணிகள் வசதிகளை அதிகப்படுத்தி கொடுத்திருந்தாலும் ரயிலில் இருந்து இறங்கி வரும் பயணிகள் பேருந்துக்காக காத்திருக்கும் நிழல் கூரைகள், கழிப்பிட வசதிகள் ,பேருந்து நிறுத்தம்,வாகனங்கள் சென்று வருவதற்கான வசதி வாய்ப்புகளைபேரூராட்சி நிர்வாகம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# சோளிங்கர் அருகே முன் விரோதம் காரணமாக ஒருவர் வெட்டி கொலை



ராணிப்பேட்டை, மார்ச். 9

ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் அடுத்த ரெண்டாடி கிராமத்தைச் சேர்ந்த பல்வேறு வழக்கில் தொடர்புடைய பிரபல ரவுடி சீனு என்கின்ற சீனிவாசன் (51) என்பவர் அவரது விவசாய நிலத்தில் நீர் பாய்ச்ச சென்றபோது மர்ம நபர்களால் வெட்டி கொலை சடலத்தை மீட்ட சோளிங்கர் போலீசார் கொலை குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# செம்பட்டி அருகே டாரஸ் லாரியில் ரேஷன் அரிசி கடத்திய 2 பேர் கைது




திண்டுக்கல், மார்ச்.9

திண்டுக்கல் குடிமை பொருள் வழங்கள் குற்ற புலனாய்வுத்துறை இன்ஸ்பெக்டர் சுகுணா தலைமையில், சார்பு ஆய்வாளர் ராதா, சிறப்பு சார்பு ஆய்வாளர்கள் நாகராஜன், கணேசன் காவலர்கள் கணேஷ், காளிமுத்து, விஜய் ஆகியோர் கொண்ட தனிப்படையினர் செம்பட்டியை அடுத்த ஆத்தூர் பிரிவு அருகே தீவிரவாகனசோதனையில் ஈடுபட்டிருந்தபோது அவ்வழியாக வந்த டாரஸ் லாரியைநிறுத்திசோதனை செய்தபோது அதில் ரேஷன் அரிசி கடத்தி செல்வது தெரிய வந்ததை தொடர்ந்து லாரியில் வந்த அன்வர், டிரைவர் விக்னேஷ் ஆகிய 2 பேரை கைது செய்து அவர்களிடமிருந்து 19,300 கிலோ ரேஷன் அரிசி கடத்தலுக்கு பயன்படுத்திய டாரஸ் லாரி ஆகியவற்றை பறிமுதல் செய்து விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்

# ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியலில் இந்தியில் பெயர்கள்: அரசியல் கட்சியினர் அதிர்ச்சி




திருச்சி, மார். 9

ஸ்ரீரங்கம் சட்டப்பேரவைத் தொகுதி வாக்காளர் பட்டியலில், வாக்காளர்பெயர்மற்றும்அவரது தந்தையின் பெயர் இந்தியில் அச்சிடப்பட்டு உள்ளதால் அரசியல் கட்சியினர் அதிர்ச்சியடைந்துள்ளனர். தமிழகம் முழுவதும் இறுதி வாக்காளர் பட்டியல் கடந்த ஜனவரி 6ம் தேதி வெளியிடப்பட்டு, பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு பட்டியல் வழங்கப்பட்டது. மேலும், வட்டாட்சியர் அலுவலகங்கள், அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்பு அலுவலகங்களில் மக்கள் பார்வைக்கு வாக்காளர் பட்டியல் வைக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில், திருச்சி ஸ்ரீரங்கம் சட்டப்பேரவைத் தொகுதி வாக்காளர் பட்டியலில், 1வது வார்டு 72வது பாகத்தில் 1,265வது வரிசை எண்ணில் வாக்காளரின் தந்தை பெயர் மற்றும் 14வது பாகத்தில் 1,128 வது வரிசை எண்ணில் வாக்காளர்பெயர்மற்றும் அவரது தந்தையின் பெயர் இந்தியில் அச்சிடப்பட்டு உள்ளது. இது குறித்து வருவாய்த்துறையினர் கவனத்துக்கு அரசியல் கட்சியினர் கொண்டு சென்றனர். தமிழகம் முழுவதும் இந்தி மொழி திணிப்புக்கு எதிராக போராட்டங்கள், பிரசாரம், மும்மொழிக் கொள்கைக்கு எதிரான விவாதங்கள் தீவிரமடைந்து உள்ள நிலையில், வாக்காளர் பட்டியலில் வாக்காளர்கள்சிலரது பெயர்கள் இந்தியில் அச்சிடப்பட்டு இருப்பது அரசியல் கட்சியினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# அரசு பள்ளியில் மயங்கி விழுந்து மாணவி பலி



ஊத்தங்கரை, மார்ச்.9

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த ரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சுற்றுப்புற பகுதியைச்சேர்ந்த 50 மாணவர்கள், 48 மாணவிகள் என மொத்தம் 98 பேர் 8ம் வகுப்பு வரை படித்து வருகின்றனர். இவர்களில் திருப்பதி என்பவரின் மகள் இந்துமதி (11) 6ம் வகுப்பு படித்து வந்தாள்.

நேற்றுவழக்கம்போல், பள்ளிக்கு சென்றாள். மாலை 4 மணியளவில் பள்ளி வளாகத்தில் சக மாணவிகளுடன் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது, திடீரென வாந்தி எடுத்தவாறு இந்துமதி மயங்கி விழுந்தாள்.

சிறிது நேரத்தில் அங்கேயே உயிரிழந்தாள்.

இதுகுறித்து ஊத்தங்கரை போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அதீத வன்முறை காட்சிகள் கொண்ட படமாக உருவாகிய 'மார்கோ' ரூ.100 கோடிக்கும் அதிகமாக வசூல்



இயக்குனர் ஹனீப் அடேனி இயக்கத்தில் உன்னி முகுந்தன் நடிப்பில் கடந்த ஆண்டு டிசம்பர் 20ந் தேதி வெளியான படம் 'மார்கோ'. தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் வெளியான இப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. அதீத வன்முறை காட்சிகள் கொண்ட படமாக உருவாகிய 'மார்கோ' ரூ.100 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்தது.

இப்படத்திற்கு தணிக்கை வாரியம் ஏ சான்றிதழ் வழங்கிய காரணமாக தொலைக்காட்சியில் ஒளிபரப்ப அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. . சமீபத்தில் கேரள முதல் மந்திரி இந்த படத்தை மறைமுகமாக விமர்சித்திருந்தார். இதுபோன்ற எதிர்ப்புகளால், ஓடிடியில் வெளியான நிலையில் அந்த ஒளிபரப்பு உரிமையும் ரத்து செய்யப்படுமோ என்கிற சூழல் உருவாகியுள்ளது

இப்படத்தின் தயாரிப்பாளர் ஷெரீப் முகமது இதனால் விரக்தியடைந்திருக்கிறார். அவர் கூறுகையில், 'இந்த படம் வன்முறையை ஆதரிக்கும் படம் இல்லை. இதற்கு முன்பு கூட இதே போன்று படங்கள் வெளியாகி இருக்கின்றன. ஆனாலும் மார்கோ படத்திற்கு நிறைய எதிர்ப்புகள் எழுந்திருப்பது வருத்தம் அளிக்கிறது. இனிவரும் நாட்களில் இது போன்ற வன்முறை படங்களை நான் ஒருபோதும் தயாரிக்க மாட்டேன்" என்று கூறியுள்ளார்.

# பணம்தான் அதிகாரம் நடிகை வித்யா பாலன்



இந்தி திரையுலகில் முன்னணி கதாநாயகியாக இருக்கும் வித்யாபாலன், மறைந்த சில்க் சுமிதா வாழ்க்கை கதையான தி டர்ட்டி பிக்சர் படத்தில் நடித்து தேசிய விருது பெற்றார். தமிழில் அஜித்குமாரின் நேர்கொண்ட பார்வை படத்தில் நடித்திருந்தார். இவர் கடைசியாக 'பூல்பூலைய்யா3' படத்தில்நடித்திருந்தார். அனீஸ் பஸ்மி இயக்கிய இப்படத்தில் கார்த்தி ஆர்யன், திரிப்தி டிம்ரி, வித்யா பாலன், மாதுரி தீட்சித் உள்ளிட்டோர் நடித்திருந்தனர்.

சமீபத்தில் ஒரு வங்கியின் பிராண்ட் தூதராக அறிவிக்கப்பட்ட பாலன், 'பணம்தான் அதிகாரம்' என்பதை புரிந்துகொண்டது தனது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது என்று கூறியுள்ளார். நிதி சுதந்திரத்தின் முக்கியத்துவம் குறித்த உரையாடலில், பெண்கள் தங்கள் நிதியை பொறுப்பேற்க வேண்டியது ஏன் அவசியம் என்பது குறித்த தனது பார்வையை நடிகை வித்யா பாலன் பகிர்ந்து கொண்டார்.

"நான் ஒரு வருடத்துக்கு முன்புதான் பணம் என்பது ஒரு அதிகாரம் என்பதை உணர்ந்தேன். இது சம்பாதிப்பது அல்ல. இது உங்களது பொருளாதாரத்தை பொறுப்பேற்பதாகும். நீங்கள் பணத்தை எப்படி சேமிப்பது, செல்வு செய்வது, முதலீடு செய்வது என்பது தீர்மானிக்க வேண்டும். பணத்தை நிர்வகிப்பது உங்களுக்கு பலத்தையும் வாழ்க்கையை பயமின்றி எதிர்கொள்ளவும் உதவும்.

முக்கியமாக பெண்களுக்கு பணத்துக்காக மற்றவர்களை சார்ந்து இருக்கும்போது அது அவர்களை விருப்பமற்ற திருமணம், விரும்பிய வேலையை செய்ய முடியாமல் திணறடிக்கும்போது முக்கிய பங்கு வகிக்கிறது.

பலருக்கும் தங்களது கனவுகளை அடைய முடியாமல் இருக்க பொருளாதாரம் முக்கிய பங்கு வகிக்கிறது. பொருளாதார தன்னிறைவு ஒவ்வொருவருக்கும் முக்கியாமனது. ஆனால், அது பெண்களுக்கு கூடுதல் முக்கியமானது என்பேன்..போதுமான அளவுக்கு பணம் தேவைநான் திருமணம் செய்தபோது எனது அப்பா 'இனிமேல் உனது வருவாயை உனது கணவர் பார்த்துக்கொள்வார்' என்றார். அதற்கு நான், 'ஏன் என்னை இதில் நம்பமாட்டீர்கள்? என்னுடைய பணத்தை வேறொருவர் ஏன் கவனிக்க வேண்டும்? இதுவரை நான் அதில் ஆர்வமில்லாமல் இருந்தேன்.

ஆனால், இப்போதிலிருந்து நான் இதைப் பார்த்துக்கொள்கிறேன்' என்றேன்.

பணத்தை நிர்வகிப்பதுதான் முக்கியமானது. பல பெண்களுக்கு அவர்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறதெனக் கூடத் தெரியாது. நான் என்னுடைய பணத்தை நான் நிர்வகிக்க ஆரம்பித்தபோது பணம் வளர்ச்சியடைய தொடங்கியது. எனது பார்வையும் மாறியது.பணம் மகிழ்ச்சிக்கு முக்கியமான காரணியல்ல. ஆனால், பொருளாதார சமநிலை உங்களுக்கு வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்க உதவும். அதிகமான வசதி தேவையில்லை. ஆனால், போதுமான பணம் தேவையானது. போதுமானது என்பதை உணர்வதுதான் உண்மையான அதிகாரம்" என்றார்.

# மகளிர் பிரீமியர் லீக்: ஹர்லீன் தியோல் அதிரடி.. டெல்லி அணியை வீழ்த்தி குஜராத் வெற்றி




மகளிர்பிரீமியர்லீக்தொடரில்நேற்றுநடைபெற்றஆட்டத்தில்டெல்லி கேப்பிடல்ஸ் குஜராத் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற குஜராத் பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த டெல்லி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 177 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக கேப்டன் மெக் லானிங் 92 ரன்கள் குவித்தார். குஜராத் தரப்பில் மெக்னா சிங் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

பின்னர் 178 ரன்கள் இலக்கை நோக்கி களமிறங்கிய குஜராத் அணிக்கு பெத் மூனி ஹர்லீன் தியோல் இணை சிறப்பாக விளையாடி வெற்றியை தேடி தந்தனர். 19.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த குஜராத் 178 ரன்கள் அடித்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக ஹர்லீன் தியோல் 70 ரன்களும், பெத் மூனி 44 ரன்களும் அடித்தனர். டெல்லி தரப்பில் ஷிகா பாண்டே மற்றும் ஜெஸ் ஜான்சன் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

# பிரேசில் அணியில் 1½ ஆண்டுக்கு பின் மீண்டும் இணைந்த நெய்மார் ரசிகர்கள் உற்சாகம்




உலக கோப்பை கால்பந்து தொடருக்கான தகுதிச்சுற்று ஆட்டங்கள் கடந்த 2023ம் ஆண்டு நடைபெற்றது. அதில் நடந்த ஒரு ஆட்டத்தில் பிரேசில் அணி உருகுவே அணியை எதிர்கொண்டது. முதல் பாதி ஆட்டத்தின்போது பிரேசில் அணியின் பிரபல நட்சத்திர ஆட்டக்காரரான நெய்மார் பலத்த காயமடைந்து துரதிர்ஷ்டவசமாக வெளியேறினார்.

காலில் அடிபட்டு நடக்க முடியாத நிலை ஏற்பட்டதால் அவரை ஸ்டிரெச்சரில்வைத்து மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அவர் இல்லாத நிலையில் பிரேசில் அணி 20 என தோல்வியடைந்தது. நெய்மார் காயமடைந்தது பிரேசில் அணிக்கு பின்னடைவாக பார்க்கப்பட்டது.

இது குறித்து அப்போது அணியின் கேப்டன் கேகேமிரோ கூறியதாவது:

"அவர் எங்களுக்கு முக்கியமான வீரர், அவர் தொடர்ந்து ஆடவேண்டும் என மிகவும் விரும்புகிறோம். ஆனால் அவர் காயங்களால் மிகவும் அவதிப்பட்டு வருகிறார். காயத்தில் இருந்து குணமடைந்து பார்முக்கு திரும்பும்போது மீண்டும் காயமடைகிறார்" என்றும் கேப்டன் கேசேமிரோ கூறினார்.

இந்நிலையில் உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கான தகுதி சுற்றில் முன்னாள் சாம்பியன் பிரேசில் அணியானது வருகிற 20ந்தேதி கொலம்பியாவையும், 25ந்தேதி நடப்பு சாம்பியன் அர்ஜென்டினாவையும் சந்திக்கிறது.

இதற்கிடையில்இவ்விருதகுதிசுற்றுக்கானபிரேசில்அணியில்நட்சத்திரவீரர்33வயதானநெய்மார்சேர்க்கப்பட்டுள்ளார்.

இவரின் இடதுகால் முட்டியில் ஏற்பட்ட காயத்தால் நிறைய போட்டிகளை தவற விட்ட நெய்மார் 1½ ஆண்டுக்கு பிறகு பிரேசில் அணிக்கு திரும்பியுள்ளார். இந்த தகவல் ரசிகர்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஐ.எஸ்.எல். கால்பந்து; மும்பை அணியை வீழ்த்தி கேரளா வெற்றி




13 அணிகள் இடையிலான 11வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து தொடர் இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளது. இந்த தொடரில் இதுவரை நடந்துள்ள லீக் ஆட்டங்களின் முடிவில் மோகன் பகான், கோவா, பெங்களூரு, ஜாம்ஷெட்பூர், நார்த் ஈஸ்ட் யுனைடெட் அணிகள் பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறி உள்ளன.

இந்நிலையில், இந்த தொடரில் கேரளாவில் இன்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் கேரளா பிளாஸ்டர்ஸ் எப்.சி. மும்பை சிட்டி எப்.சி. அணிகள் மோதின .

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய கேரளா அணி 10 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. கேரளா அணியில் குவாமே பெப்ரா கோல் அடித்தார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.